3. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை பரிசீலனைக்குப் பின் ஏற்று, ஊராட்சி உதவியாளர் பணியிடத்தில் நிலை–1, நிலை–2 என இரு நிலைகளில் எந்த நிலையில் பணிபுரிந்திருந்தாலும், மேலும், முழுநேர ஊராட்சி எழுத்தராகவோ அல்லது பகுதிநேர ஊராட்சி எழுத்தராகவோ பணிபுரிந்திருந்தாலும் அவர்கள் 01.04.2003க்கு முன்னர் இளநிலை உதவியாளர் நிலையில் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டிருப்பின் அவர்களது மேற்காணும் தொகுப்பூதிய பணிக்காலத்தில் 50 விழுக்காடு பணிக்காலத்தினை அரசுப் பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதிய பயன்களுக்கு எடுத்துக் கொள்ள அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.1086/FS/P/2011, நாள் 10.05.2011–ன் மூலம் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.சு.பழனியப்பன்,
அரசு முதன்மைச்செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஊரகவளர்ச்சி (ம) ஊராட்சி ஆணையர், சென்னை 15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
(சென்னை நீங்கலாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35/6
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு அலுவலகம், சென்னை.15

<u>நகல்</u>

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதித் (ஊ.வ) துறை, சென்னை–9.
நிதித் (ஓய்வூதியம்) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.